வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 5/2023 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 24.01.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரஜினி | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

எனக்கு குறிப்பிட்டு வீடு ஊர் என்று எதுவும் கிடையாது. எனக்கு படிக்க தெரியாது. எத்தனை வருடங்களுக்கு முன்பு சம்பவம் நடந்தது என்று தெரியாது. கரகம்பாக்கத்தில் உள்ள எனது மாமியார் வீட்டில் நான் இருந்தேன் எனது மனைவியை பிரசவத்திற்கு மருத்துவமனையில் சேர்த்திருந்தேன். பிரசவத்திற்கு எனது அண்ணன் ஆஜர் எதிரியிடம் காசு கேட்டேன். அப்போது எனது அப்பா முழுவதுமாக குடித்துவிட்டு எனது அண்ணன் காவலுக்கு இருந்த மாந்தோப்பிற்கு வந்தார். எனது அண்ணன் காசு கொடுக்கிறேன் என்று கூறினார். எனது அப்பா முழுவதும் குடித்திருந்ததால் அவரிடம் நான் பேசவில்லை. என் அப்பாவிற்கு தலையில் காயம் இருந்தது. எப்போதும் அதுபோல் கிழே விழுந்துவிட்டு வருவார். எப்போதும் போல் விழுந்ததில் காயம் என்று நான் அங்கேயே இருந்துவிட்டேன். எனது அப்பா அம்மாவை திட்டிகொண்டு இருந்தார். காலையில் பேசிக்கொள்ளலாம் என்று படுங்க என்று கூறினேன். படுக்க சொன்ன போது அவர் கிழே விழுந்தார். நானும் எனது அண்ணனும் அவரை படுக்க போட்டோம். எனது அக்காவிற்கு போன் செய்து தகவல் சொன்னேன். எனது அக்கா இரவு 10 மணிக்கு நம்பாக்கம் வந்தார். காலையில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லலாம் என்று எனது அக்கா சொன்னார். நாங்களும் படுத்துவிட்டோம். பொழுதுவிடிந்தவுடன் எனது அப்பா எழுந்திருக்கவில்லை. எனது அப்பா

இறந்துகிடந்தார். அக்காவிற்கு தகவல் சொன்னேன். அக்கா வந்த சிறிது நேரத்தில் போலீசார் வந்தார்கள். போலீசார் என்னையும் ஆஜர் எதிரியையும் மற்றும் அக்காவையும் அழைத்து சென்றார்கள். மேற்சொன்ன விவரத்தை போலீசாரிடம் சொன்னேன். என்னையும் எனது அக்காவையும் கையொப்பம் வாங்கிகொண்டு அனுப்பிவிட்டார்கள். ஆஜர் எதிரியை அவர்கள் நிறுத்தி கொண்டார்கள்.

(சாட்சி பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

24.05.2020 தேததி இரவு 10 மணிக்கு எனது அப்பா கிஷ்டன் அவருக்கும் அண்ணன் சிரஞ்சீவிக்கும் தகராறு ஏற்பட்டு சிரஞ்சீவி எனக்காக கொடுத்த பணத்தை கொடுக்காமல் செலவு செய்துவிட்டதாக சொன்னதால் சீரஞ்சீவி ஆத்திரம் அடைந்து எனது அப்பாவை அசிங்கமாக திட்டி சௌவுக்கு கட்டையால் பின் பக்க தலையில் அடித்தும், மார்பு வயிற்று பகுதியில் காலால் எட்டி உதைத்தும் அப்பாவை கொலை செய்துவிட்டு தலைமறைவு ஆவிட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எனது அண்ணன் என்பதால் அவர் காப்பாற்றுவதற்காக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியாது. நான் கையொப்பம் போட்ட தாளில் இருந்ததை போலீசார் படித்து காண்பிக்கவில்லை. எனது தகப்பனார் அடிப்பட்ட நிலையில் தான் சம்பவயிடத்திற்கு வந்தார். சம்பவயிடத்தில் சௌவுக்கட்டை எதுவும் கிடையாது.

**மறுவிசாரணை - இல்லை**

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 5/2023 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 24.01.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வசந்தா | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் சென்றான்பாளையத்தில் குடியிருக்கிறேன். எனது கணவர் ' பெயர் கிஷ்டன். அசா 1 எனது மகள். ஆஜர் எதிரி எனது மகன். மற்றொரு மகனின் பெயர் ரஜினி. சென்றான்பாளையத்தில் உள்ள மாந்தோப்பில் நானும் எனது கணவரும் காவலுக்கு இருந்தோம். ஊருக்கு போய்விட்டு எனது கணவர் முழுவதுமாக குடித்துவிட்டு உருண்டுபிரண்டு வந்தார். அவர் விழுந்து வந்ததில் தலையில் பலத்த காயம் இருந்தது. அவர் தல்லாட்டத்துடன் கிழே விழுந்துவிட்டார் எதுவும் பேசவில்லை. எனது சின்னமகன் ரஜினி சென்றான்பாளையத்தில் வேறு இடத்தில் குடியிருக்கிறார். அவருக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். ரஜினி என் கணவரை படுக்க போட்டு விட்டு சென்றுவிட்டார். எனது மகள் இரவு 10 மணிக்கு மாந்தோப்பிற்கு வந்தார். பேருந்து எதுவும் கிடைக்காது என்று கூறி மறுநாள் காலை மருத்துவமனைக்கு அழைத்து செல்லலாம் என்று கூறிவிட்டார்கள். நான் அங்கே படுத்துவிட்டேன். ஆஜர் எதிரி அப்போது அங்கு இல்லை. காலையில் எழுந்துபார்த்தபோது என் கணவர் உயிருடன் இல்லை. மறுநாள் காலை 10 மணிக்கு போலீசார் வந்தாரகள். யார் சொல்லி வந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. போலீசார் என் மகள் மற்றும் இரண்டு மகன்களை அழைத்து சென்றார்கள். என்கணவருக்கு குடிபோதை பழக்கம் இருந்ததால் அவருக்கு எங்கேகியவது விழுந்து காயம் ஏற்பட்டிருக்கும். இதேபோல் ஏற்கனவே அவருக்கு

குடித்து கிழே விழுந்து காயம் ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

24.05.2020 தேததி இரவு 10 மணிக்கு எனது கணவர் கிஷ்டன் அவருக்கும் பெரிய மகன் சிரஞ்சீவிக்கும் தகராறு ஏற்பட்டு சிரஞ்சீவி தனது தம்பி ரஜினிக்காக கொடுத்த பணத்தை தம்பிக்கு பணம ் கொடுக்காமல் செலவு செய்துவிட்டதாக சொன்னால் சீரஞ்சீவி ஆத்திரம் அடைந்து தனது கணவரை அசிங்கமாக திட்டி சௌவுக்கு கட்டையால் பின் பக்க தலையில் அடித்தும், மார்பு வயிற்று பகுதியில் காலால் எட்டி உதைத்தும் கணவரை கொலை செய்துவிட்டு தலைமறைவு ஆவிட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மகன் என்பதால் அவர் காப்பாற்றுவதற்காக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.**

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 5/2023 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 24.01.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | புஜ்ஜி | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் சென்றான்பாளையம் கிராமத்தில் வசிக்கிறேன். எனக்கு ஒரு மகன் இரண்டு மகள்கள். எனது அப்பா பெயர் கிஷ்டன். எனது அம்மா பெயர் வசந்தா. ஆஜர் எதிரி எனது தம்பி. எனது சின்னதம்பி பெயர் ரஜினி. நான் மூத்த சகோதரி. எனது அப்பாவும் அம்மாவும் எங்கே வேலை கிடைக்குதோ அங்கே கூலிக்கு வேலைக்கு செல்வார்கள். சில வருடங்களுக்கு முன்பு நம்பாக்கத்தில் உள்ள மாந்தோப்பில் எனது தம்பி காவலுக்கு இருந்தபோது எனது அப்பாவும் அம்மாவும் வந்தார்கள். எனது சின்னதம்பி ரஜினி இரவு 10 மணிக்கு என் அப்பாவிற்கு அடிப்பட்டு கிடப்பதாக போன் மூலமாக சொன்னார். என் கணவரை அழைத்து கொண்டு மாந்தோப்பிற்கு வந்தேன். என் அப்பா முழு குடிபோதையில் இருந்தார். அவருக்கு கழுத்திலும், பின் தலையிலும் பலத்த காயம் இருந்தது. அவர் போதையில் உளறிகொண்டிருந்தார். போதையில் இருப்பதால் அவரை மருத்துவமனைக்கு அழைத்துசெல்ல வேண்டாம் என்று என் கணவர் கூறியதால் நான் அழைத்து செல்லவில்லை. என் தம்பிகள் ஆஜர் எதிரி மற்றும் ரஜினியிடம் காலையில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லலாம் என்று கூறிவிட்டு நான் சென்றுவிட்டேன். மறுநாள் காலை 8 மணிக்கு மாந்தோப்பிற்கு வந்து பார்த்தபோது என் அப்பாவிற்கு மூச்சு பேச்சு இல்லை. என் அப்பா இறந்துவிட்டதாக எனது கணவர் கூறினார். வீட்டிற்கு அழைத்து செல்லலாம் என்று

நாங்கள் முடிவுசெய்த சமயத்தில் பென்னலூர்பேட்டை போலீசார் அங்கே வ்ந்துவிட்டார்கள். யார் அவர்களுக்கு தகவல் கொடுத்துவிட்டார்கள் என்று எனக்கு தெரியவில்லை. என்னையும் ஆஜர் எதிரி மற்றும் ரஜினியையும் போலீசார் அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை காவல் நிலையத்தில் விசாரித்து வெற்று காகிதத்தில் கைநாட்டு வாங்கினார்கள். காண்பிக்கப்பட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள கைநாட்டு என்னுடையதா என்று எனக்கு தெரியவில்லை. அதேபோல் தான் கைநாட்டு வைப்பேன். ரஜினியையும் போலீசார் விசாரித்தார்கள். எதிரியை மட்டும் அழைத்து சென்றார்கள். என்னிடம் பெயர் ஊர் மட்டும் கேட்டார்கள். வேறு எந்த விவரவும் கேட்கவில்லை.

(சாட்சி பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எனது அப்பாவிற்க்கும் தம்பிக்கும் பண தகராறு இருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 24.05.2020 அன்று இரவு சுமார் 7 மணியளவில் பண கொடுக்கமுடியாது எனது அப்பா கூறிய காரணத்தினால் எதிரி சிரஞ்சீவி கோபம் கொண்டு எனது அப்பாவை அசிங்கமாக பேசி சௌவுக்கு கட்டையால் பின்பக்க தலையில் அடித்தும். காலால் அவரது மார்பு கழுத்து வயிற்றில் எட்டி உதைத்தும் எனது அப்பாவை கொலை செய்துவிட்டு சிரஞ்சீவி தலைமறைவு ஆகிவிடடதாக கூறிவிட்டு தற்போது எதிரி எனது தம்பி என்கின்ற காரணத்திற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசாரிடம் இந்த விவரத்தை கூறி புகார ் வாக்குமூலத்தை கொடுத்து அதில் கைரேகை வைத்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியாது. எனது தாய் மொழி தெலுங்கு (சாட்சி சாட்சியம் பதிவு செய்த சமயத்தில் நன்றாக தமிழ் புரிந்து தமிழில் பதில்

அளித்தார்.) போலீசார் என்னை விசாரிக்கவில்லை. மறுநாள் காலை 9 மணிக்கு காவல் நிலையம ' சென்றோம். என்னிடம் வெற்று தாளில் தான் கைரேகை வாங்கினார்கள். அதில் தட்டச்சு எதுவும் செய்யப்படவில்லை. நான் கைரேகை செய்ததில் எதுவும் எழுதப்படவில்லை. காலை 10 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து திரும்பவும் வந்துவிட்டேன். அதன்பிறகு காவல் நிலையம் நான் செல்லவில்லை. மாந்தோப்பில் மறுநாள் நான் சென்று பார்த்தபோது கட்டை எதுவும் இல்லை என்றால் சரிதான். முதல் நாளிலும் அதுபோல் கட்டை எதுவும் சம்பவ இடத்தில் இல்லை. மருத்துவமனையிலிருந்து எனது அப்பாவின் பிரேதத்தை கொண்டுவந்தபின்பு தான் ஆஜர் எதிரியை அனுப்புவோம் என்று சொல்லி எங்களை மட்டும் அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு ஆஜர் எதிரியை ஜெயிலுக்கு அனுப்பி விட்டார்கள். வீட்டிற்கு வரவில்லை.

**மறுவிசாரணை - இல்லை**